# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

*******

**முறையீட்டு மனு எண்: 299/2016/பே–2**

**ஆணை நாள். 01 –08–2018**

**ஓமலூர் பேரூராட்சி பொதுமக்கள்,**
**ஓமலூர் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்.** **-- முறையீட்டு மனுதாரர்கள்**

**1.பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்,**
**ஓமலூர் பேரூராட்சி.**
**2.செயல் அலுவலர்,**
**ஓமலூர் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்** **-- எதிர் மனுதாரர்கள்.**

ஆணை

சேலம் மாவட்டம், ஓமலூர் பொதுமக்கள் எனக்குறிப்பிட்டு வரப்பெற்ற நாளிடப்படாத புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2016ல் பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 299/2016 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவின் மீது அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

மேற்படி முறையீட்டு மனுவில் ஓமலூர் பேரூராட்சி பகுதியில் விரிக்ஷா அவென்யு என்ற நகர் ஒன்று புதிதாக உருவாகியுள்ளதாகவும், இந்த நகர் பேரூராட்சியின் அனுமதியின்றியும், விதிகளின்படி 10% நிலத்தினை பேரூராட்சிக்கு ஒப்படைக்காமலும் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இம்மனைப்பிரிவின் உரிமையாளரிடம் ஓமலூர் பேரூராட்சி மன்ற தலைவர்,துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் லஞ்சம் பெற்றுள்ளதாக தெரிவித்தும் மேற்படி மனைகளை இணையதளம் மூலம் விற்பனை செய்து வருவதாகவும் புகார்கள்தெரிவிக்கப்பட்டுள்ளன

இம்முறைமன்ற நடுவ 15.04.2016 நாளிட்ட அறிவிப்பாணையின்படி, மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க தெரிவித்து ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

மேற்படி புகாருக்கான விளக்க அறிக்கையினை ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 31.08.2017ம் நாளிட்ட அறிக்கை மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சி பகுதியில் விருக்ஷா அவென்யூ என்ற நகர் அப்போதைய உரிமையாளர் திரு.எஸ்.சம்பத்குமாரன் என்பவரால் அமைக்கப்பட்டமைக்கு, ஓமலூர் பேரூராட்சி கடித ந.க.எண். 410/2015/அ.1/நாள்.03.05.2016ன் மூலம் நோட்டீஸ் வழங்கப்பட்டதாகவும், இதன் அடிப்படையில் திரு.எஸ்.சம்பத்குமாரன் என்பவர், மேற்கண்ட மனைப்பிரிவினை பொதுமக்கள் யாருக்கும் விற்பனை செய்யவில்லை எனவும், மேற்கண்ட இடத்தினை திரு.ஆதேஷ்குமார், த/பெ திரு.கிருஷ்ணகுமார் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து, இது தொடர்பாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட நபருக்கு, பேரூராட்சி கடித ந.க.எண்.410/2015/அ.1/நாள்.08.12.2016ன்படி தாக்கீது/அறிவிப்பு வழங்கப்பட்டு மேற்கண்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவினை பொதுமக்களுக்கு விற்பனை செய்வது தடுக்கப்பட்டு, தற்போதைய அரசு அறிவிக்கையின்படி மேற்கண்ட இடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு இடம் என நகர் ஊரமைப்புத்துறைக்கு 30.03.2017 நாளிட்ட பேரூராட்சி கடிதம் மூலம் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு விற்பனை தடுக்கப்பட்டதாக தெரிவித்திருப்பினும், இவ்வினத்தில் முறையாக கண்காணித்து பேரூராட்சிக்கு எவ்வித இழப்பும் ஏற்படாவண்ணம் அரசு சட்ட விதிகள் முறையாக பின்பற்றப்படுவதையும் செயல் அலுவலர் உறுதி செய்துகொள்ளவேண்டுமென ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 01 -ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பெற்று அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

27/8/2018

செயலாளர்.

பெறுநர்

1.செயல் அலுவலர்,
ஓமலூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சேலம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்.